
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 314
வியாழக்கிழமை
06 ஒக்ரோபர் 2022
புரட்டாதி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கத்தியைக் காட்டி நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக். 6
வீட்டிலிருந்த வயதான தம்பதியரை கத்தியைக்காட்டி மிரட்டி ரூபா 7 இலட்சம் பெறுமதியான நான்கரைப் பவுண் தங்க நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
நெல்லியடி - மாலு 11



## முல்லைத்தீவில் பெரும் பதற்றம்

ஏட்டிக்குப் போட்டியாக களமிறங்கிய மீனவர் குழுக்கள்
பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல்
சட்டவிரோத தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தரப்பு உடந்தை?

முல்லைத்தீவு, ஒக். 6
சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு துணைபோகும் அதிகாரிகளை இட மாற்றக் கோரியும், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கோரியும் முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று மூன்றாவது நாளாக மாவட்டக் கடற்றொழில் 11

தமிழர்களின் கோரிக்கையை கணக்கிலெடுக்காத

# ஐ.நா. தீர்மானத்தை நிராகரிக்கின்றோம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டமான அறிக்கை

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 6**

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டுமென்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையை உள்ளடக்காத ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தை அடியோடு நிராகரிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.** 11

## உள்விவகாரங்களில் தலையிடாதீர்கள்

ஜெனிவாவில் 'புராணம்' பாடிய அலி சப்ரி

விரிவு - பக். 11

## குமரப்பா, புலேந்திரன் நினைவுநாள் நேற்று



யாழ்ப்பாணம், ஒக். 6
மாவீரர்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 35 ஆண்டு நினைவுநாள் நேற்று மாலை 6 மணியளவில் அவர்களின் நினைவுத் தூபி அமைந்துள்ள மற்றும் அவர்களின் 10

## மிதமிஞ்சிய வேகத்தால் இளைஞன் உயிரிழப்பு

13 வயதுச் சிறுவன் அதிதீவிர சிகிச்சையில்

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதி, கொட்டடி லைடன் சந்தியில் நேற்று மாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். 13 வயதுச் சிறுவன் படுகாயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளான். 10

## 22 ஆம் திருத்தம் நிறைவேறுவதை ஒத்திப்போட ரணில் புதுத்திட்டம்

எதிரணிகளின் நிலைப்பாட்டைக் கேட்கிறாராம்

கொழும்பு, ஒக். 6
22ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காய்களை நகர்த்தி 10

கடந்த ஜனவரியுடன் ஒப்பிடுகையில்

## உயிர்கொல்லி போதைக்கு அடிமையான மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

வடக்கு மாகாண ரீதியாக பாடசாலைகளில் விழிப்புணர்வை ஆரம்பிக்க உடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு 11

உயிர்கொல்லி போதைக்கு அடிமையான

## வழிப்பறிக் கொள்ளையர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஒக். 6
உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான வழிப்பறிக் கொள்ளையர்கள் மூவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் ஒருவரின் நான்கரைப் பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைகளில் பாசிசம்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6

**வெளியில் ஜனநாயகம் பற்றி பேசப்பட்டாலும், பல்கலைக்கழகத்துக்குள் மாணவர் சங்கங்களால் பாசிசவாதமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பெயர் ஜனநாயகம் அல்ல - இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டவர்கள் ஜனநாயகம் பற்றி கதைக்கின்றனர். ஆனால், பல்கலைக் கழகத்துக்குள், மாணவர் சங்கங்களால் பாசிசவாதம், அடிப்படைவாதம், அச்சுறுத்தல், பாதாளக்குழு செயற்பாடே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முதலாம் வருட வகுப்பு மாணவன் கடிகாரம்கட்ட முடியாது. அவ்வாறு கட்டினால் கால்கள் கட்டப்படுகின்றன. மாணவிகளால் தோடுபோட முடியாது, வெளிப்படையாக சொல்ல முடியாத பல வதைகளும் உள்ளன.

அதேபோல கோத்தாவை விரட்டிய, எங்களுக்கு உன்னை விரட்டுவது பெரிய விடயம் அல்ல என பீடாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி, தீ வைத்து கொளுத்தி, கொலை செய்துவிட்டு, நீதிமன்றில் முன்னிலையான பிறகு 24 மணிநேரத்துக்குள் பிணை கிடைப்பது ஜனநாயகம் அல்ல.

சட்டம், ஒழுங்கு முறையாக இருந்தால்தான் எல்லாம் பாதுகாக்கப்படும்.' - என்றார். (ம-44)

## தேசிய பேரவையில் சம்பிக்க ரணவக்க!



கொழும்பு, ஒக். 6

தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான 'தேசியபேரவை'க்கு, 43ஆம் படையணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க உள்வாங்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போதே சபாநாயகர் இந்தத் தகவலை வெளியிட்டார். தேசியபேரவைக்கு அண்மையில் 32 உறுப்பினர்கள் பெயரிடப்பட்டனர். எனினும், அந்தப் பட்டியலில் சம்பிக்க ரணவக்கவின் பெயர் இடம்பெறவில்லை. இந்த நிலையிலேயே அவர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளார். (ம-44)

## வடக்கு இளையோரைப் போன்று தெற்கு மாணவரை அழிக்காதீர்!

### பொதுஜன பெரமுன உறுப்பினர் சாணக்கியனுக்கு வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 6

வடக்கில் மாணவர்களைத் தூண்டிவிட்டு உசுப்பேற்றும் உரைகளை நிகழ்த்தி அங்குள்ள இளைஞர்களை அழித்தமைபோன்று தெற்கிலும் அவ்வாறானதொரு நிலைமையைத் தோற்றுவிக்கவேண்டாம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பஸ்குவல்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய இரா.சாணக்கியன், "போராட்டத்தில் ஈடுபட்ட இளையோரை அடக்க அரசு செயற்பட்டால் அதன் பிரதிபலனை வெகு விரைவில் அனுபவிக்க நேரிடும்" எனத் தெரிவித்த கருத்தின்போது குறுக்கிட்ட பொதுஜன பெரமுன எம்.பி. அனுர பஸ்குவல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

மாணவர்களைத் தூண்டி விடும் வகையில் உரையாற்றி மாணவர்களைத் தவறாக வழிநடத்த வேண்டாம். வடக்கில் உசுப்பேற்றும் உரைகளை நிகழ்த்தி அங்கு அவர்களை அழித்தமைபோல் தெற்கில் தீ வைக்க முயற்சிக்க வேண்டாம்.

வடக்கில் மாணவர் போராட்டம் என்ற பெயரில் கடந்த காலங்களில் நாட்டில் தீவிரவாதச் செயற்பாடுகளையே உங்கள் சந்ததியினர் மேற்கொண்டனர். தெற்கு மாணவர்கள் அமைதியான முறையில் கல்வி கற்பதற்கு இடமளியுங்கள். மாணவர்களைச் சிறைக்கு அனுப்பும் வகையில் நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டாம் - என்றார். (ச-இ)

# இலங்கையை தொடர்ந்தும் பிரிட்டன் கண்காணிக்கும்!

## இராஜாங்க அமைச்சர் ஜீஸ் நோர்மன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக பிரித்தானியா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானம் செலுத்தும் என்று பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் ஜீஸ் நோர்மன் தெரிவித்துள்ளார். பிரித்தானியா, இலங்கையின் முக்கியமான படைத்தரப்பு அதிகாரிகளுக்கு பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளைக் கண்காணிப்பில் வைத்திருப்பதற்கான சிறந்த பொறிமுறை பிரித்தானியாவிடம் உள்ளது. தொடர்ந்தும் இலங்கை தமது பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது - என்றார். (ச-இ)

## பல்கலைப் பட்டமளிப்பின் போக்குவரத்து ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை வரையான மூன்று தினங்கள் இடம்பெறவுள்ள நிலையில், போக்குவரத்து தொடர்பான ஒழுங்குகள், நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய குறிப்பிட்ட மூன்று தினங்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திருநெல்வேலி சந்தியிலிருந்து கொக்குவில் சந்தியை நோக்கிய ஆடியபாதம் வீதியின் ரயில்கடவை வரையான பகுதி, கலட்டி சந்தியிலிருந்து இராமநாதன் வீதி, பரமேஸ்வராச்சந்தி வரையான வீதி ஆகியன ஒரு வழிப்பாதையாகப் பேணப்படும் என்று நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் அறிவித்துள்ளார். (ம-14)

## 'தீந்தமிழ் இலக்கணம்' நூல் வெளியீடு

சாவகச்சேரி ஒக்.6

தமிழ் பாட ஆசிரியர் அ.க. தர்மராசாவின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான 'தீந்தமிழ் இலக்கணம்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தெஹிவளை தமிழ் மகா வித்தியாலய அதிபர் சோ.முரளி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வாழ்த்துரைகளை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர்களான மு.நாகேந்திரராஜா, க.அருந்தவபாலன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி, தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச-9)

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் சரிவு

கொழும்பு, ஒக்.6

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 369.91 ரூபாவாகவும், கொள்வனவு விலை 359.16 ரூபாவாகவும் பதிவாகி யுள்ளது.

நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடும்போது ஸ்ரேலிங் பவுணுக்கு எதிரான ரூபாவின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் யூரோவுக்கு எதிராகவும் ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் மதிப்பு தளம்பல் நிலையில் காணப்படுகின்றது.

யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 370.47 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 355.61 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. ஸ்ரேலிங் பவுணின் நேற்றைய விற்பனை பெறுமதி 424.34 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 408.17 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எது பாசிசவாதம்?

பல்கலைக்கழகங்களுக்குள் மாணவர் சங்கங்களால் பாசிசவாதமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று நாடாளுமன்றத்தில் பொரிந்துதள்ளியுள்ளார் இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் எதிரொலியாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகியதை அடுத்து பெரமுனவின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட ரணில் அரசாங்கம், பல்கலைக்கழக மாணவர்களை ஒடுக்குவதை இலக்குவைத்துச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு அண்மைக்காலமாக பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில், பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கங்கள் மற்றும் அமைப்புகள் பாசிசவாதத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார கூறியதை, அவ்வளவு சாதாரணமாகக் கடந்துபோக முடியாது.

அதேநேரம், அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களை பாசிசவாதம் என்று விளிப்பது இதுவொன்றும் முதன்முறையுமல்ல. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற சில நாள்களிலேயே அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் பொலிஸாரின் பலப்பிரயோகத்தால் நீர்த்துப்போகச் செய்யப்பட்டன. அப்போது அரசாங்கத்தின் கைது வேட்டைகளுக்கும், அராஜக நடவடிக்கைகளுக்கும் எதிராக கண்டனக்கணைகள் குவிந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், நாட்டின் ஜனாதிபதியாக ஒரேயொரு பதிலையே ரணில் திரும்பத் திரும்பச் சொல்லத்தொடங்கினார். 'பாசிசவாதச் செயற்பாடுகளுக்கு நாட்டில் இடமில்லை' என்பதே அந்தக் கிளிப்பிள்ளைத் தத்துவம். ஆக, அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் சர்வதேச கவனக்குவிவைப் பெறும் வகையிலோ அல்லது உயர் அழுத்தத்தை வழங்கும் வகையிலோ வெளிப்பட்டால் அவற்றைப் 'பாசிசவாதம்' என்று முத்திரைகுத்துவதென்ற ரணில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத்தான் இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டாரவின் கூற்றும் இயம்புகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் விவரங்களை பாதுகாப்பு அமைச்சுக் கோரியமையாக இருக்கட்டும், களனியில் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதும், அதற்கு முன்பு இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட பலப்பிரயோகமாக இருக்கட்டும், இவை அனைத்தும் பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் மீது எந்நேரமும் கூரிய கத்தி தொங்கிக் கொண்டிருப்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது. கோத்தாபய அரசாங்கம் கூட, முன்னெடுக்காத அடக்குமுறைகளை ரணில் அரசாங்கம் இலகுவாகவும், வெகுஅலட்சியத்தோடும் முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறது.


மாணவர் சக்தி மாபெரும் சக்தி. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பிலும் நாட்டில் இதர பகுதிகளிலும் பூதாகரமாகியமைக்கு முக்கியமான காரணமே இந்தப் போராட்டத்தின் தளமாக மாணவர்களும் பல்கலைக்கழகங்களும் இருந்தமையே. ஆதலால், அந்த மாணவர்களையும் – பல்கலைக்கழக சமூகத்தையும் – ஒடுக்கிவிட்டால் தமது இருப்பை உறுதிசெய்துவிடலாம் என்ற அரசாங்கத்தின் நப்பாசையே மாணவர் சமூகம் இலக்குவைக்கப்படுவதன் பின்னணியில் உள்ள சூட்சுமம் என்பதொன்றும் பரம இரகசியமல்ல.

அரசாங்கத்தின் வினைத்திறனற்ற நடவடிக்கைகள் இன்று இலங்கையில் உள்ள அனைத்துக் குடும்பங்களினதும் பொருளாதாரத்தை ஆட்டம்காணச் செய்திருக்கின்றன. தம் பொருளாதாரத்தைப் பறிகொடுத்துவிட்டு, வாழ்வதற்கு உகந்த பிடிமானம் இல்லாமல், இருப்பைத் தொலைக்கும் நிலையில் வறிய – நடுத்தர மக்கள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பேரவல நிலையை ஏற்படுத்திய பொருளாதாரக் குற்றவாளிகளோ இன்னமும் அமைச்சுக்களுக்காகவும் இராஜாங்க அமைச்சுக்களுக்காகவும் பேரம் பேசலை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த அபத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதும் – கேள்வி கேட்பதும் எவ்வாறு பாசிசவாதம் ஆகும். அது பாசிசமாகவே இருந்தால் அத்தகைய பாசிசவாதத்தில் தவறேது?

## நாளொரு நல்வார்த்தை

"தன்னுடைய துணிவு, சுயமரியாதை, தன்னம்பிக்கையை இழக்காமல் செயற்படுபவனுக்குத் தோல்வி என்று எதுவும் இல்லை."!

- ஓரிசன் ஸ்வெட் மார்டன்




# சர்வதேச அழுத்தம்தான் தீர்வைப் பெற்றுத்தரும்!

## நியூஸிலாந்து தூதுவரிடம் மாநகர முதல்வர் எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 6**

**தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சர்வதேச நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்துக்கு வழங்கும் அழுத்தங்கள் மூலமே கிடைக்கப்பெறும் இவ்வாறு நியூஸிலாந்துத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன்.**



யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் மற்றும் இலங்கைக்கான நியூஸிலாந்துத் தூதுவர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று யாழ். மாநகரசபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் யாழ். மாநகர சபையின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் தூதுவர் விரிவாகக் கேட்டறிந்தார். இதன்போதே யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நீண்டகாலமாக நடத்தப்படவில்லை. அதற்கான எந்த நடவடிக்கையும் அரசு முன்னெடுக்கவில்லை. அத்துடன், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மக்கள் ஆணையுடன் புதிய அரசு அமைய வேண்டும். அதற்கு நியூஸிலாந்து அரசாங்கம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என மாநகர முதல்வர் தூதுவரிடம் வலியுறுத்தினார்.

சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் இடம்பெற்ற போராட்டங்களில் தமிழ்மக்கள் ஏன் பங்குகொள்ளவில்லை? என தூதுவர் கேள்வி எழுப்பினார். வெறுமனே முகங்கள் மாறுவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு, அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறவேண்டும். ராஜபக்ச அரசுக்குப் பின் ரணில் வருவது எமக்கான பிரச்சினைகளுக்கான தீர்வாகக் கருதவில்லை என விளக்கினார் மாநகர முதல்வர். (ச-20)

# கோபாவின் தலைவராக கபீர் ஹாசீம்

கொழும்பு, ஒக். 6

'கோபா' எனப்படுகின்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

'கோபா' குழுவின் முதலாவது கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. இதன்போதே தலைமைப்பதவிக்கு கபீர் ஹாசீம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனையின் பிரகாரமே, தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்பட்டது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ம-44)

**நாளை** 07.10.2022 வெள்ளிக்கிழமை புரட்டாதி - 20

சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம்: 10.32 - 12.02

பிரதோஷ விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம் எனும் அறப்பணி!

■ தசன்

அறிவுத்தாகத்தை கரிசனையோடும் சமூகப் பொறுப்போடும் தன்நலம் பாராது வழங்கும் சேவையெனில் அது ஆசிரிய சேவையே. கற்றல், கற்பித்தலைப் பாடசாலைக் கட்டமைப்புடன் இரண்டற இணைத்தபடி எதிர்காலச் சிற்பங்களைச் செதுக்கும் சிற்பியே ஆசிரியர்கள். இன்று ஆசிரியர்களின் செயற்பாடுகள் வேறொரு தளத்தில் இடம்பெற வேண்டியது காலத்தேவையாகவுள்ளது. இன்னும் சொல்லப்போனால், ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை பல்வேறு சவால்களுக்கும் பின்னடைவுகளுக்கும் மத்தியிலேயே நகர்த்த வேண்டியுள்ளது.

இன்று பெரும்பாலான மாணவர்கள் கல்வி நடவடிக்கை மற்றும் பாடசாலை வரவுகளிலிருந்து விலகுவதை அண்மைக்காலப் புள்ளிவிவரங்கள் தெட்டத்தளிவாக எடுத்தியம்புகின்றன. இதற்கு அண்மைய ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கொடிய பொருளாதாரப் பின்னடைவு, நீண்டகாலப் போர், கொரோனாத்தொற்றால் ஏற்பட்ட தாக்கம் என்பன முக்கியமான காரணங்களாக அமைந்துள்ளன. இவ்வாறான மாணவர்களை சாதாரண கற்பித்தல் அணுகலில் இருந்து வேறுபட்டு அணுகவேண்டிய தலையாக கடமை ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. இவ்வாறான நிலையில் இருக்கும் ஒவ்வொரு மாணவன் மீதும் தனித்தனியாகச் சிறப்புக் கண்காணிப்பைச் செலுத்துவது இன்று ஆசிரியர்கள் முன்னுள்ள சிறப்புக் கடமையாக இருக்கின்றது. இலக்கு, இலட்சியம் இல்லாத மாணவர்கள் இழப்புக்கு மேல் இழப்பைச் சந்திக்க நேரிடும். இதனால் அவர்களின் வாழ்நாள் விரக்தியும் வேதனையும் நிறைந்ததாகக் காணப்படும்.



இலக்கு, இலட்சியம், முறையான திட்டமிடலுடன் கூடிய நேரமுகாமைத்துவம், அன்றாடம் கற்ற கல்வியை இன்றே கற்கும் பழக்கம் போன்றன இளமைக் கல்விக் காலத்தின் இனிமையையும் வசந்தத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவற்றை மாணவர்கள் அனுபவரீதியாக உணர அன்பான அரவணைப்புடன் கூடிய ஆளுமை நிறைந்த ஆசிரியர்கள் கிடைக்கப்பெறுதல் ஓர் அரிய கொடையும், ஆக்கபூர்வமான அடித்தளமுமாகும்.

அன்றாட வாழ்க்கையில் பலருக்கு பண்பாக உரையாடத் தெரிவதில்லை. ஒவ்வொருவருக்கும் மற்றவர்களின் மெல்லுணர்வுகளைப் புரிந்து மதிப்புக் கொடுக்கத் தெரிவதில்லை. இதனால் வலிந்து பிரச்சினைகளைத் தேடிக் கொள்கிறார்கள். நாம் நலமாக வாழ்வதற்கும் பிரச்சினைகள் இன்றி வாழ்வதற்கும் மனம், உடல், சமூகச் சுற்றுச்சூழல் நன்றாக இருக்கவேண்டும். சமூகச் சுற்றுச்சூழல் நன்றாயிருக்க சமூகத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகப் பயணித்தல் வேண்டும். அப்போதுதான் சுற்றுச்சூழல் தூய்மை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றைப் பேணமுடியும் என்பதை மாணவ சமூகத்திலிருந்தே கற்பிக்க வேண்டும். இதை ஆசிரியர்களாலே அறிவுரீதியாக சிறப்பாகச் செய்ய முடியும். மகிழ்ச்சியான தோற்றம், முதிர்ச்சியான அறிவு - ஆளுமை, அறம் நிறைந்த ஆணித்தரமான பேச்சு, பாரபட்சமின்றி பழகும் பண்பு என்பன மாணவர்கள் மனநிறைவுடன் கற்பதற்கான ஆக்கபூர்வமான பின்னணியாகும்.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்று தமிழ் முதுமொழி கூறுவதும் நாம் அறிந்ததே. மாணவர்களைப் புத்தாக்கச் சிந்தனை உடையவர்களாக உருவாக்க ஆசிரியர்களிடம் முதலில் தேடல் இருக்க வேண்டும். தேடலில் ஆவலுடைய ஆசிரியரால் மாணவர்களுக்கு புதியன புகட்டவும், புள்ளிவிவரமும் தரவுகள்- தகவல்களை வழங்கவும், நவீன அணுகுமுறைகளையும் நன்கு உணர்த்தவும் முடியும். ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைக்கு அப்பால் சமூகத்தில் சமூக நீதியையும் மனித விழுமியத்தையும் போதிக்கும் நீதிமான்களாவர். அதிலும், தற்கால ஆசிரியர்களிடம் அந்த அறப்பண்பு மிக மிக அவசியமாகின்றது. உயிர் கொல்லி ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களின் விற்பனைச் சந்தையாக இன்று மாணவர் சமூகம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கற்றல் நடவடிக்கைகளில் இருந்து மட்டுமல்லாமல், விளையாட்டு, பண்பாடுகள், கலைகள், கலாசாரங்கள் என அனைத்திலிருந்தும் மாணவர் சமூகம் தூர விலக்கப்பட்டுவரும் பின்னணியில் இந்த இழிநிலையில் இருந்து மீண்டும் மாணவர்களை தூக்கி நிமிர்த்த வேண்டியவர்களாக - சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்கால இருப்பைப் பேண வேண்டியவர்களாக இருக்க வேண்டிய முதற்கடமை ஆசிரியர்களுக்கே உரியது. ■







படங்கள்: - ஐ.சிவசாந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி - மானம்பு உற்சவம் நேற்று இடம்பெற்றது. (ய-20)









யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக் கட்சித் தொகுதிக்கிளை அலுவலத்தில் நேற்றுமுன்தினம் நவராத்திரி நிகழ்வு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை உதய வாழ்வுநிறுவனத்தின் மாணவர்களால் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்பு

வவுனியா, ஒக். 6
வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.
வேப்பங்குளத்தில் உள்ள தனியார் காணியிலுள்ள பாவனையற்ற மலசலகூடத்தைப் புனரமைக்கும்போதே குழிக்குள் இருந்து வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனையடுத்து நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு மேற்படி வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-110)

# கத்தியைக் காட்டி ரூ.13 லட்சம் 'அபேஸ்'

## சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஒக். 6
புல்மோட்டைப் பகுதியிலிருந்து கிளிநொச்சி, பூநகரி பரமனை பகுதிக்கு வாகனக் கொள்வனவுக்காகச் சென்ற நால்வரிடம் கத்தியைக்காட்டி மிரட்டி 13 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்ற சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
புல்மோட்டைப் பகுதியிலிருந்து பூநகரி பரமனை பகுதிக்கு வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக நேற்றுமுன்தினம் நால்வர் சென்றவேளை, அங்கு வாகனத்தை காட்டுவதாகக் கூறியவர்கள் திடீரென கத்தியைக் காட்டி மிரட்டி வாகனக் கொள்வனவுக்கு எடுத்துவந்த 13 லட்சம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சம்பவம் தொடர்பில் உடனடியாக பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.
முறைப்பாட்டுக்கமைய பூநகரி பொலிஸார், பூநகரி சங்குப்பிட்டி பகுதியில் வைத்து 6 சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். அத்துடன், அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட 13 லட்சம் ரூபா பணத்தையும் பொலிஸார் மீட்டனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-113)

# கடலட்டைப் பண்ணைகளால் அழிவுநிலையில் கடல்வளம்!

## கடலுணவுக்குத் திண்டாடுவோம் என மீனவ சமூகம் பகிரங்க எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 6**
**யாழ். மாவட்டக் கடற்பரப்பில் அதிகரித்துவரும் கடலட்டைப் பண்ணைகளால் சில வருடங்களில் யாழ். மக்கள் தமக்குத் தேவையான கடலுணவைப் பெறுவதற்குத் திண்டாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**




யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
யாழ். குடாக்கடலின் பல்வேறு கடற்பகுதிகள், மீன் இனங்கள் இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும் இடங்களாகக் காணப்படுகின்றன.
இந்த நிலையில் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதற்காக குறித்த பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டு வருவதோடு பல பகுதிகளில் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.
இயற்கையாகவே இறால் உற்பத்தி இடம்பெறும் பகுதியாக தீவகக் கடற் பரப்புப் பகுதி காணப்பட்ட நிலையில் செயற்கையாக இறால் பண்ணைகளை அமைப்பதற்கு சிலர் முயற்சி செய்கிறார்கள்.
எமது வளமான கடற்பகுதியில் முறையற்ற விதத்தில் அட்டைப் பண்ணைகள் அமைத்து எமது கடல் வளத்தையே நாசப்படுத்தும் செயற்பாடு மிகவும் வேகமாக இடம்பெற்று வருகிறது.
இவ்வாறான செயற்பாடுகள் அதிகரிக்குமானால் யாழ். மாவட்ட மக்களுக்குத் தேவையான கடலுணவை சில வருடங்களின் பின்னர் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.
எனவே, எமது மீன்பிடித் தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் அட்டைப் பண்ணைகள் மற்றும் கடலை மாசுபடுத்தும் பண்ணைகளை அகற்றவேண்டும் என்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் நாம் கேட்டுக்கொள்கிறோம்.
மேலும், எமது கடல் வளம் எமது மக்களுக்கே பயன்படவேண்டும். அவ்வாறில்லாமல் அட்டைப் பண்ணை என்ற போர்வையில் எமது கடலை நாசப்படுத்துவதை தடுத்து நிறுத்தவேண்டும் - என்றார். (ம-14-27)

# சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 6
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
கோப்பாய் மத்தி பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு சின்னராசா (வயது-52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்புத் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-125)





## ம.உ. ஆணைக்குழுவில்

# கடலட்டைப் பண்ணைக்கு எதிராக முறைப்பாடு பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 6
பூநகரியில் கடலட்டைப் பண்ணையால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளனர்.
பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவர்கள், கடந்த பல நாள்களாக தமது மீன்பிடித் துறைகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி உணவுத் தவிர்ப்பு மற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தார்கள். தமது போராட்டத்தின் ஒரு பகுதியாகவே அவர்கள் இது தொடர்பில் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாட்டையும் பதிவுசெய்துள்ளனர்.
தொழில்துறைகளை ஆக்கிரமித்து அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணைகளால் சிறு மீன்பிடி கரையோரத் தொழிலாளர்கள் தமது பாரம்பரிய மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வாழ்க்கைச் செலவையோ பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (ம-14-213)

# அரசியல் தீர்வை வலியுறுத்தி குஞ்சுக்குளத்தில் போராட்டம்




மன்னார், ஒக். 6
வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் தீர்வை வலியுறுத்தி இடம்பெற்றுவரும் நூறுநாள் போராட்டத்தில் 65ஆவது நாள் கவனவீர்ப்புப் போராட்டம், மடு குஞ்சுக்குளம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
போராட்டத்தில் குஞ்சுக்குளம் கிராம மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பெண்கள் அமைப்பினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உ/த பரீட்சையைப் பிற்போட்டால் கல்வித்துறைக்குப் பெரும் பாதிப்பு!

## கல்வி அமைச்சர் விளக்கம்



**கொழும்பு, ஒக். 6**

**கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைத் திகதியை பிற்போட்டால் அது ஒட்டுமொத்தக் கல்வித்துறைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் சாதாரண தரப் பரீட்சையையும் உரிய காலத்தில் நடத்த முடியாமற்போகும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹேஷா விதானகே உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையைப் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கருத்துத் தெரிவித்தபோது, பரீட்சை திணைக்களம் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு அதிககாலம் எடுப்பதால், அடுத்த தவணை உயர்தரப் பரீட்சை எழுதுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு அதற்காக தயாராவதற்குக் காலம் போதாது.

கடந்த வருட உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த மாதமே வெளியிடப்பட்டது. இந்த வருட உயர்தரப் பரீட்சை டிசம்பர் மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் இரண்டாவது தடவையாக பரீட்சை எழுதுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு 98 நாள்களே இருக்கின்றது.

அதனால் உயர்தரப் பரீட்சையை 2 மாதங்களுக்காவது பிற்போட வேண்டும் என்று அந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை இரண்டு மாதங்களுக்கு பிற்போட்டால் 10 ஆயிரம் பாடசாலைகளை உயர்தரப் பரீட்சைகளுக்காக ஒரு மாத காலத்துக்கு மூடவேண்டி ஏற்படுகின்றது. மாணவர்களுக்கு ஏற்கனவே பாடசாலை நாள்கள் குறைவாகவே நடந்துள்ளன.

ஒரு மாதத்துக்கு பாடசாலைகளை மூடுவதால் மாணவர்களின் பாடத் தவணைகளை உரிய காலத்துக்கு முடிக்க முடியாமல் போகின்றது. அதே நேரம் பாடசாலை நேர அட்டவணைக்கும் பரீட்சை நேர அட்டவணைக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுகின்றது.

உயர்தரப் பரீட்சையை இரண்டு மாதங்களுக்கு பிற்போட்டால் அடுத்து இடம்பெற ஏற்பாடாகி இருக்கின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்த முடியாமல் போய்விடும். இவ்வாறு சென்றால் ஒரு நிலைமைக்கு கொண்டுவர முடியாமற் போகும். கொரோனாத்தொற்று காரணமாக அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டிருந்தன. அதனால் ஏற்பட்ட இந்தப் பிரச்சினையை தற்போதுதான் ஓரளவுக்குச் சரிசெய்து வருகின்றோம்.

பரீட்சைகளை பிற்போடும்போது அடுத்த வருட புதிய பாடசாலை தவணையை மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்க முடியாமற் போகும். கடந்த வருடம் புதிய பாடசாலை தவணை ஏப்ரல் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதனால் இரண்டு தவணைகளையே எமக்கு பூரணப்படுத்த முடிந்தது. அடுத்தவருடமும் இந்நிலையே ஏற்படும். என்றாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய, உயர்தரப் பரீட்சை திகதியில் மாற்றத்தை செய்ய முடியுமா? என பரீட்சை திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கின்றேன். திகதியில் மாற்றம் ஏற்படும்போது ஏனைய மாணவர்களுக்கும் அநீதி ஏற்படக்கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கின்றது - என்றார். (எ-இ)



## ஏப்.21 தாக்குதல் சம்பவம் ஜனாதிபதி அவதானம்

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் சர்வதேச விசாரணை நிறுவனங்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார். நீதிமன்ற நடவடிக்கையின் ஊடாகவே தண்டனை வழங்க முடியும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோர் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் விசாரணையின் முன்னேற்றம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் விசாரணை அறிக்கையை மறைப்பதற்கும், குற்றவாளிகளை பாதுகாப்பதற்கும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்கு 66 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. தேசிய பாதுகாப்பு காரணிகளின் நிமித்தம் ஆணைக்குழுவின் ஒருசில விடயங்களை பகிரங்கப்படுத்த முடியாது. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கத்தை செயற்படுத்துவதற்காக அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. உப குழுவின் பரிந்துரைக்கமைய அறிக்கையின் பல விடயங்கள் தற்போதும் நிறுவன மட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும். கர்தினாலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் - என்றார். (எ-இ)

### அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தில்

# இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயார்

## ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.6

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நீடித்து நிலைக்கும் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கத் தேவையான மறுசீரமைப்புகளை ஏற்படுத்தவும், தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கும் இலங்கை எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கத் தயார் என்று ஐரோப்பிய ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் ஏர்சூலா வொன் டேயர் லைன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

இலங்கை மக்கள் எதிர்பாராத சவால்களைச் சந்தித்துள்ளனர். இந்த நெருக்கடியிலிருந்து மீள, இலங்கை இந்தக் காலகட்டத்தில் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.

நாட்டை மீண்டும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும், நீடித்து நிலைக்கும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் தேவையான மறுசீரமைப்புகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவருகிறது. சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடும் உரிமை, அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்துதல், அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பன இந்தச் செயன்முறையின் மிக முக்கியமான அம்சங்களாகும்.

இலங்கையின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெகு விரைவில் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும். இலங்கையரின் குறுகிய மற்றும் நீண்டகால நலன்களை உறுதிசெய்யும் வகையில், நிலையான கொள்கைகளை அறிமுகம் செய்ய ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

எதிர்பாராத பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களுடனும், கடன் வழங்குநர்களுடனும் நடத்தப்படும் பேச்சு வெற்றியளிக்க வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (எ)

## கலைப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 6

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் முதலாம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு, சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தால் கலைப் போட்டிகள், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமையும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நடத்தப்படவுள்ளன. (ம-14)

# வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு நாச்சிக்குடா மக்கள் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஒக். 6

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரி கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.

நாச்சிக்குடா பள்ளிவாசல் முன்பாக ஒன்றுகூடிய மக்கள் பேரணியாக பதாகைகளை ஏந்தியவாறு ஏ-32 வீதி நாச்சிக்குடா சந்திவரை சென்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். "ஜனாதிபதியே எம்மை திரும்பிப் பாருங்கள்", "மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு எம்மை அழைக்காதது ஏன்", "எமது உரிமை களை எமக்குத் தா", "எமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எங்கள் பாடசாலையான ஊர்காவற்றுறை,
யா/ தம்பாட்டி அ.த.க. வித்தியாலய முதல்வர்

**திரு. வில்லியம் சாந்தகுமார்**

அவர்கள் கல்வி அமைச்சு வழங்கும்
**"குரு பிரதீபா பிரபா"** விருதினைப் பெறுவதை
பெருமையோடு அறிவிக்கின்ற அதே வேளையில்
**06.10.2022** அன்று **பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்**
நிகழ்வில் விருதுபெறும் அவரை பாடசாலைச் சமூகம்
பேருவகையுடன் வாழ்தி மகிழ்கிறது.

**தங்களால், விருதும் பெருமை பெறும்**

வில்லியம் சாந்தகுமார்!
தம்பாட்டியின் நன்னயம் பேணியதால்
"பங்கயப் பீடிகையை" அங்கையில்
ஏந்தும் அற்புதம் பெற்றார்.....
கற்பிதம் தந்த இத் திருநாளில்
சத்தியம் செய்து இச் சகத்தினில் உயர்வீர் !

வாழ்த்துவோர் :

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம், ஊர்காவற்றுறை.**

# பகிரங்க அறிவித்தல்

இதன் கீழ் ஆதன அட்டவணை எல்லைகளை கொண்ட ஆதனங்களாகும். இவ்வாதனங்கள் எனக்குச் சொந்தமானவையாகும். இவ்வாதனங்களின் பிணக்கு உள்ளதால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன். யாராவது கொள்வனவு செய்வீர்களாயின் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட வேண்டி வரும் என்பதனை தெரிவித்து வருகின்றேன்.

1. வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு. தெல்லிப்பளை பிரதேச சபை. மயிலிட்டி கோவிற்பற்று. பலாலி இறை. J/252 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள "தெனமிற்குரி" நிலப்பரப்பு 11 1/4 இந்த நிலப்பரப்பு பதினொன்றே காலிற்குரிய எல்லைகள். கிழக்கு: சிவபாதம் சரோஜினிதேவிக்குரிய ஆதனம் வடக்கு: றோட்டு மேற்கு: சுப்பிரமணியம் கந்தையாவுக்கும். சுப்பிரமணியம் பத்மநாதனுக்கும். கந்தவனம் காராளசிங்கத்திற்குமுரிய ஆதனம் தெற்கு: சின்னர் ஆறுமுகத்தின் ஆதனம் இதடங்களிலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.
2. வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு. தெல்லிப்பளை பிரதேச சபை. மயிலிட்டி கோவிற்பற்று. பலாலி இறை. J/253 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள "தெனமிற்குரி" நிலப்பரப்பு 11 1/4 இந்த நிலப்பரப்பு பதினொன்றே காலிற்குரிய எல்லைகள் கிழக்கு: பொன்னம்பலம் யோகராசவின் ஆதனம் வடக்கு: சிவராசதுரையின் ஆதனமும். பொன்னுத்துரையினதும். பிள்ளைகளினதும் ஆதனங்களும் மேற்கு: பொன்னம்பலத்திற்கும் சின்னத்துரைக்கும் மறுபேருக்கு உரிய ஆதனங்களும். றோட்டும் தெற்கு: றோட்டு இதடங்களிலும். இதற்குச் சேர்ந்தவைகளும்.

ந.முகுந்தன்
புது வீடு. கருகம்பனை. காங்கேசன்துறை.
2022.10.05

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

## தீபாவளி
## ஜவுளிக் கொண்டாட்டம்

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்**



திருமணப் பட்டுச்சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
Tops, Party Frocks,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
சேட், T.சேட், சிறுவர்,
சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்

# இந்தியன் செலக்ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின்
சாம்ராஜ்யம்

காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்




## மன்னாரில் 100 வயதை பூர்த்திசெய்த மூத்த பிரஜை கௌரவிப்பு

மன்னார் ஒக். 6

100 வயதைப் பூர்த்திசெய்த மூத்த பிரஜை ஒருவர் மன்னாரில் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு, மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் 'மாறிவரும் உலகில் மீள் உய்கை மிக்க சிரேஷ்ட பிரஜைகள்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வின் ஒருபகுதியாகவே மனுவேல் சந்தான் என்னும் மூத்த பிரஜை கௌரவிக்கப்பட்டுள்ளார்.

(ய-56)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் அதிபர்

**அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா**

(A.C) SLPS III அவர்கள்
சிறந்த அதிபருக்கான
**"குருபிரதீபா"** விருதைப் பெற்றமையைப்
பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் பல உயர்வுகளைப்
பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று 06.10.2022
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
36 ஆவது பட்டமளிப்பு
விழாவில்
**B.B.A (Hons)**
பட்டம் பெறும்

**டிலக்ஷனா ஸ்ரீகாந்தன்**

அவர்கள்
மென்மேலும் பல
பட்டங்கள் பெற்றுயர
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்

(cs 21090)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
06 . 08 . 1938



விண்ணில்
28 . 09 . 2020

நவாலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை
வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

**அப்பா !**

அன்பிற்கோர் இலக்கணமாய்
பண்பிற்கோர் இருப்பிடமாய்
பாசத்திற்கோர் எடுத்துக்காட்டாய்
எம் நல் வாழ்விற்கோர் வழி காட்டியாய்
பாரினில் எம்மோடு வாழ்ந்து

மறைந்தாலும் மறையாமல்
எம் நெஞ்சில் வாழும் எம்
ஆருயிர் தந்தையை இந் நாளில்
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(cs.1033) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 09 . 1947



மறைவு
04 . 10 . 2022

## முருகையா வசந்தமலர்

புதுத்தோட்டம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி, மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா வசந்தமலர் அவர்கள் கடந்த (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பு பொன்னு தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பு முருகையாவின் பாசமிகு மனைவியும், முரளிதரன் (லண்டன்), விஜித்தா (நோர்வே), பாலதரன் (லண்டன்), வினோதா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்சினி (லண்டன்), ஜெயசூரியன் (நோர்வே), துஷ்யந்தி (லண்டன்), தபேசன் (கல்விசாரா ஊழியர் அராலி, இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயமலர், அமரர் வசந்தராணி, ஜெயதேவி, அமரர் விமலாதேவி, தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆருண்யா, அபினா, அஸ்வினா (லண்டன்), விஜயசூரியன், வர்ணன் ஜெனனன் (நோர்வே), டிலக்ஷன், திவ்யன், அக்ஷயா (லண்டன்), சரண்ஜா, சங்கவி, யதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் மாதகல் போதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விபுலானந்தர் வீதி,**
**மாதகல்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
021 22 118 59

(CR 38212) 1/6

# மரண அறிவித்தல்

## இராஜரெத்தினம் செபபாக்கியம்

யாழ். ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது லண்டனில் வாழ்ந்தவருமான இராஜரெத்தினம் செபபாக்கியம் கடந்த (24.09.2022) சனிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராயப்பு - ரோஜம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கிறேஸ் (கனடா), ஜோய்ஸ் (இலங்கை), ஸ்ரெலா (லண்டன்), ஜெயரெட்னம் (இலங்கை), லூசியா (இந்திரா - ஜேர்மனி), பெலிசியா (சந்திரா - கனடா), ஜீவரெட்னம் (ஜீவா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, செல்லம்மா, தம்பிராஜா, நல்லையா, பொன்னையா, பொன்னம்மா, புஸ்பராணி, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஏகாம்பரம் (கனடா) மற்றும் ஜெயராஜா (இலங்கை), மகேந்திரன் (லண்டன்), மங்களகௌரி (இலங்கை), ஜோசப் ஸ்ரெனி (ஜேர்மனி), ஜோஜப் தர்மநாயகம் (கனடா), சிவஞானவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - லூர்த்தம்மா, பூர்ணம், கணேசன், தம்பித்துரை மற்றும் சரஸ்வதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான தேவசகாயம், வரப்பிரகாசம், நேசமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிறிமா (கனடா), திலீபன் (கனடா), துஷ்யந்தன் (கனடா), நிலுசி (கனடா), சுரேந்திரா (லண்டன்), சாலினி (லண்டன்), நர்த்தனன் (லண்டன்), ஜென்சிகா (ஐக்கிய அமெரிக்கா), நிரோசிகா (பிரான்ஸ்), ஜெனோசன் (இலங்கை), ஜோய்ஸ்டன் (ஜேர்மனி), டிலுஷா (ஜேர்மனி), லக்ஸியா (ஜேர்மனி), டெல்சா (கனடா), கென்யா (கனடா), அல்விஸ் (கனடா), மதுரா (லண்டன்), சாலட் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திவ்யன் (கனடா), நீலகி, நீஸ்னா (கனடா), றிஸ்டன் (கனடா), றினிட்டா (கனடா), ஹாசினி (லண்டன்), ஹரிஸ்மன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (06.10.2022) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



**பழும் வீதி,**
**ஆனைக்கோட்டை.**
**தொடர்புகளுக்கு:**
**077 900 9555, 076 787 4835**
**077 625 7913** whatsapp

**தகவல்:**
**இ.ஜெயரட்ணம்**
**(மகன் - ஜெயம்)**

தோற்றம்
14.01.1929

மறைவு
24.09.2022

(cs.21097) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விதைப்பு!

*மன். சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தெரிவிப்பு*

**மன்னார், ஒக். 6**

**எதிர்காலத்தை நாசமாக்குவதற்கும் போதை வியாபாரத்தை பெருக்கிக் கொள்வதற்கும் சிறுவர்களை இன்று குறிவைத்து போதைப்பொருள்கள் விதைக்கப்பட்டு வருகின்றன - இவ்வாறு மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ் தெரிவித்தார்.**

பேசாலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்கள் சிந்திக்கின்ற பிரச்சினைகளையும் நாளாந்தம் அவர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களையும் தங்கள் குரல்களினாலேயே பெற்றோருக்குத் தெரியப்படுத்துகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும், வெளியிலும் பிள்ளைகளின் உரிமைகளை நாம் மறுக்காது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் செவிமடுக்கவேண்டும்.

எமது அரசாங்கமும் பல்வேறுபட்ட வழிமுறைகளைக் கையாண்டு சிறுவர்களுக்கான பாதுகாப்புக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களின் எதிர்காலத்தின் நலன்களை தகர்த்தெறிவதற்கு போதைப்பொருள் சிறுவர்களை இலக்குவைத்து அவர்கள் மத்தியில் விதைக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள்களால் பிள்ளைகள் வழி தவறிப் போகும் சூழ்நிலைகள் பல உருவாகி வருகின்றன. ஆகவே, அவ்வாறான சந்தர்ப்பங்களை நாம் இனங்கண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-14,60)


# மரண அறிவித்தல்

மண்ணில் 23 . 07 . 1971



விண்ணில் 04 . 10 . 2022

## திரு. ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)

(மோகன் சவுண்ஸ் - உரிமையாளர்)

பத்திரகாளி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஞானசுந்தரம் உதயசங்கர் நேற்றுமுன்தினம் (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஞானசுந்தரம் - குணவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தனவதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தகுமாரியின் பாசமிகு கணவரும், தனுஜன், றேனுஜன், தனுக்காந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பற்குணராஜா (பிரான்ஸ்), உதயகுமார் (ரூபன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

T.P.: 077 984 8963, 077 666 0524


## தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஒக். 6

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையில் தொழிற்கல்வியை நிறைவுசெய்த பயிலுநர்களுக்கான வெளிநாட்டு, உள்நாட்டு வேலைவாய்ப்பை வழங்குவதற்கான தொழிற்சந்தை இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை யாழ்ப்பாண நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தொழிற்சந்தையில் பலதரப்பட்ட தொழில்திறனுடையோர் துறைசார்ந்த அனுபவத்துடன் பங்குபற்றவுள்ளனர். அத்துடன் பலதரப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை வழங்கும் நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளன. (ம-14)

# முத்திரைத் தீர்வைகள் கிடைப்பதில் தாமதம்

சாவகச்சேரி, ஒக். 6

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்த வருடத்துக்குரிய முத்திரைத் தீர்வை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதுவரை மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கான முத்திரைத் தீர்வை மாதாமாதம் வழங்கப்பட்டது. தற்போது கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தந்த சபைகளால் மாதாந்தம் கோரிக்கைகள் அனுப்பப்படுகின்றபோதும், கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. உள்ளூராட்சி சபைகள் உத்தேச வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது முத்திரைத் தீர்வை மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கும் தொகை அபிவிருத்தி வேலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

வருடம் முடிவடையும் நிலையில் இதுவரை முத்திரைத் தீர்வைக்குரிய நிதி வழங்கப்படாததால் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று மேலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-9)

# உப உணவுப் பயிர்ச்செய்கையை பார்வையிட்ட மன்.மாவட்டக் குழு

மன்னார், ஒக். 6



கல்மடு படிவம் 2 பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் உப உணவு பயிர்ச்செய்கையை மன்னார் மாவட்டச்செயலர் தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டது.

கல்மடு படிவம் பகுதியில் பலதரப்பட்ட உப உணவுப் பயிர்ச்செய்கைகள் மிகவும் திறம்பட மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், அதில் ஈடுபட்ட விவசாயிகளை மாவட்டச் செயலர் தலைமையிலான குழு பாராட்டியதுடன் அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தது.

மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். உதயச்சந்திரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க.மகேந்திரன், மன்னார் மாவட்டச் செயலக பிரதான கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-14,60)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஒக். 6

மந்திகை ஆதார மருத்துவமனை வளாகத்திலுள்ள மெதடிஸ்த சிற்றாலயத்தின் 27ஆவது ஆண்டு நிறைவு விழா, நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மருத்துவமனை ஊழியர்களையும் ஏனையோரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

# யாழ்.மாநகரசபைக்கு தீயணைப்பு வாகனம்

யாழ்ப்பாணம், ஒக். 6

நொதேர்ன் தனியார் மருத்துவமனை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் யாழ்.மாநகரசபைக்கு 2 கோடி ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம், நொதேன் தனியார் மருத்துவமனையில் வைத்து மருத்துவமனை நிர்வாகத்தால் நேற்றுக் காலை வழங்கப்பட்டது.



கடந்த 2020ஆம் ஆண்டு யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான தீயணைப்புப்படை வாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்த நிலையில், யாழ். வணிகர் கழகத்தின் ஒருங்கிணைப்பில் நொதேர்ன் தனியார் மருத்துவமனை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் தீயணைப்பு வாகனம் யாழ்.மாநகரசபைக்கு கையளிக்கப்பட்டது. நிகழ்வில் நொதேர்ன் தனியார் மருத்துவமனை நிர்வாகத்தினர், யாழ். மாநகர முதல்வர், யாழ். மாவட்டச் செயலர், யாழ். மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-14,26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறை வாடகைக்கு

இல.401/01. கஸ்தூரியார் வீதியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், A/L மாணவர்களுக்கும் (பெண்களுக்கு மட்டும் அறை வாடகைக்குண்டு.

075 423 6950, 077 296 1815

## வீடியோ & போட்டோ

நேரடி ஒளிபரப்பு

உங்கள் மகிழ்வான தருணங்களை
விசேட விலைக்கழிவுடன்
உடனுக்குடன் பெற்றிட அழையுங்கள்!

செந்தமிழன் STUDIO
077 6405572

### மிதமிஞ்சிய...

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த றொபிக் ஷன் (வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தார் என பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணம் மாநகரில் இருந்து கொட்டடி நோக்கி வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிள் பயணித்த இருவரில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றையவரான சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-ஒ-26-125)

## பெயர் மாற்றம்

இல.49. தவசிகுளம் வீதி.
மதவுவைத்தகுளம் வவுனியாவைச் சேர்ந்த
**இரத்தினம் அனிசிலா** ஆகிய நான்
இன்று முதல் **அனுசியா** என மாற்றியுள்ளேன் இனிவரும் காலங்களில் அனைத்து
ஆவணங்களிலும் **அனுசியா** என
பயன்படுத்துவேன் என இலங்கை
சனநாயக குடியரசு மக்களுக்கு
அறியத்தருகின்றேன்.

(cs 1034) (2.6) **அனுசியா**

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்



மலர்வு 19.10.1979 உதிர்வு 07.09.2022

கடந்த 2022.09.07 ஆந் திகதியன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
### உதயநாயகம் சத்தியா (கண்ணா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 2022.10.07ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ள தாமரைக்குளத்தடி அந்தியேட்டி கிரியை மண்டபத்திலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**வெஸ்லி ஒழுங்கை, கல்லூரி வீதி,
பருத்தித்துறை. 077 377 1239**

### குமரப்பா...

உடலம் எரிக்கப்பட்ட இடமாகிய வல்வெட்டித்துறை- தீருவில் வைத்து நினைவு கூரப்பட்டது.
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வேலவன் சுவாமி ஆகியோரின் தலைமையில் இந்தநினைவுகூரல் இடம்பெற்றது. 1987 ஆம் ஆண்டு கடலில் பயணித்தபோது புலிகளின் முக்கியமான தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகள் இந்தியப்படைகளால் கைது செய்யப்பட்டு, இலங்கைப் படைகளிடம் கையளிக்கப்பட விருந்தனர். அதன்போது பன்னிரு வேங்கைகளும் சயனைட்டை உட்கொண்டு வீரச்சாவெய்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

### 22ஆம்...

வருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
22 ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் இறுதி நிலைப்பாடு குறித்து ஆராய்ந்து விரைவில் தமக்கு அறிவிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு ரணில் ஆலோசனை வழங்கியுள்ளார்.
22 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடான நிலைப்பாட்டை எடுத்து வருவதாகவும் அதனாலேயே இந்த அறிவுறுத்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளாரெனவும் கூறப்படுகின்றது.
22 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்து எதிர்க்கட்சிக்கு சென்ற குழு, ஒரு கருத்தையும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றொரு கருத்தையும் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளனவாம்.
22ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதன் முதலில் எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் அதனாலேயே ரணில் அவர்களின் நிலைப்பாட்டை அறியத் தீர்மானித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. (அ-ஒ-இ)

### வழிப்பறிக்...

கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வழிப்பறிக் கொள்ளையர்களால் கத்தியைக்காட்டி மிரட்டி நகை பறிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே ஊரெழுவைச் சேர்ந்த, உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையான 23, 24 மற்றும் 42 வயதுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் தங்கச் சங்கிலி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.
கொக்குவில் பகுதியில் வீதியால் சென்ற ஆண்கள் மற்றும் பெண்களிடம் கத்தியைக் காட்டி கடந்த 30ஆம் திகதி பணம் மற்றும் அலைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கைதான சந்தேகநபர்களுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்புள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கொள்ளையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அந்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 06 . 1942
இறப்பு 05 . 10 . 2022



### திருமதி தம்பித்துரை மகேஸ்வரி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை மகேஸ்வரி நேற்று (05.10.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மதுரலிங்கம் தம்பித்துரையின் அன்பு மனைவியும், நந்தகுமார், தமயந்தி ஆகியோரின் அன்புத் தாயும், யமுனா (UK), தர்மராசா (இலங்கை போ.வ.சபை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பரமேஸ்வரி, இராயேஸ்வரி, அம்பிகாவதி, சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், தட்சன், தனுசியா, அர்ச்சனா, வேணுசன், தக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நல்லிணக்கப்புரம் தச்சங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 261 4939

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs 38210) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 08 . 1955
இறப்பு 05 . 10 . 2022



### செல்லத்தம்பி செல்வகுமார்

(முன்னாள் உத்தியோகத்தர் - ஆனையிறவு உப்பளம்)

சங்கத்தார் வயல் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி செல்வகுமார் நேற்று (05.10.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் செல்லத்தம்பி - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மூத்த மகனும், கந்தையா - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயந்தினி (UK), சாந்தகுமார் (முன்னாள் உத்தியோகத்தர் - ஆனையிறவு உப்பளம்), ஜீவகுமார் (UK), சாந்தகுமாரி (UK), வசந்தகுமாரி (ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர்), தவக்குமாரி (ஆசிரியர் - வ /மடுக்காரம்பளை அ.த.க. பாடசாலை), ஜெயக்குமாரி (பெண் பரிசாரகர் பிரதேச வைத்தியசாலை - வரணி), ராஜகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிறோசன் (கரைச்சி பிரதேச செயலகம்), வின்ஜிகன் (விருட்சம் கல்வி நிலையம் - பளை), ஜன்ஷா (BA. பட்டதாரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினோதா (உடையார்கட்டு ஆரம்பப் பாடசாலை), துஷ்யந்தன் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆருசன், அஜனன், அரண் கைலன், அஜய் கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திருஞானச்சந்திரன், செல்வநாயகம், புஸ்பவதி, குகநேசன், லக்ஸ்மனராஜ், யசோதராதேவி, பாலகிருஸ்ணராஜா, இராசதுரை, இராசேந்திரம், இராசநாயகம், புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, கனகேஸ்வரி, ரதீஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், பஞ்சலிங்கம் செல்வமலர், (குறவில் தமிழ் ம.வி.உடையார்கட்டு) பஞ்சலிங்கம் ஜெயலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசன் ஈச்சங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தொ.பே.: 077 844 9500
077 732 2313**

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs 38209) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி கட்டணங்கள் மீளவும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 6

தொலைபேசி நிறுவனங்கள் நேற்று முதல் மீண்டும் கட்டணத்தை அதிகரித்துள்ளன. 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு வரியை விதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக தொலைபேசி கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக தொலைபேசி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (அ-ஒ-இ)

## 5 கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின்

# ஒக்.12 முதல் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைசாலை பணியாளர்கள் தமது கோரிக்கைகளை எதிர்வரும் 12ஆம் திகதி முன்னர் நிறைவேற்றாவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர்.

நிர்வாகத்தை குழப்பும் பணியாளர்களை இடமாற்றம் செய்யவேண்டும், சாலை முகாமையாளரை சாலையில் கடமையாற்றவிட வேண்டும், உதவி முகாமையாளரை எந்தவித அழுத்தமும் இன்றி கடமையாற்றவிட வேண்டும், கொழும்புக்கான பகல் சேவையை ஆரம்பிக்கவேண்டும், எரிபொருள் செலவிலும் பார்க்க குறைந்த வருமானத்தை ஈட்டும் சேவையை மட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை நிறைவேற்றுமாறும், இல்லாவிட்டால் 12 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் பருத்தித்துறை சாலை பணியாளர்களால், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

### முல்லைத்தீவில்...

நீரியல் வளத்திணைக்களத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் அதேவேளை இவர்களுக்கு எதிராக சட்டவிரோத தொழில் நடவடிக்கையை அனுமதிக்கக்கோரியும், அதிகாரிகளை இடமாற்றவேண்டாம் என்றும் எரிபொருளை வழங்கக் கோரியும் முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

சட்டவிரோத தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்தக் கோரி போராடும் மீனவர்கள், கடந்த 3ஆம் திகதி காலை கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் உள்ளே செல்ல அனுமதிக்காத போதிலும் பின்னர் அனுமதித்தனர். தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தேசிய கடற்றொழில் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் தமக்கான தீர்வுகள் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அறிவித்த அவர்கள் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கூடாரம் அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் குறித்த மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை வைத்த தென்பகுதியில் இருந்து வருகைதந்து கொக்கிளாய் சாலை பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் மற்றும் மாத்தளன் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் என்று சுமார் 300 பேரளவில் முல்லைத்தீவு பேருந்து நிலையம் அருகே நேற்றுக் காலை பதினொரு மணியளவில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரி தென்னிலங்கை மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். இந்நிலையில் குறித்த மீனவர்கள் மற்றும் ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் இடையே முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற நிலையில் பொலிஸார், போராட்டக்காரர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கிச் செல்லாத வகையில் முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கு முன்பாக ஒரு வீதித் தடையும் தொடர்போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி வரமுடியாத வகையிலும் இன்னொரு வீதித் தடையையும் ஏற்படுத்தியிருந்தனர்.

பொலிஸாருடன் வாக்குவாதப்பட்ட சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் வீதித் தடையை உடைத்து தொடர்ந்து செல்ல முற்பட்ட போது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி அடக்க முற்பட்டனர். இதன்போது ஒருவர் மூச்சு திணறல் ஏற்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார்.

கலைந்து சென்ற தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவு சுற்றுவட்டம் மற்றும் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஒன்று கூடி தங்கள் எதிர்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலரை சந்தித்து தமது மனுவைக் கையளித்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், மீனவர்கள் இரு பகுதியாக போராடுகின்றனர். இவர்களின் பிரச்சினை தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் தெரியப்படுத்தியதன் பிற்பாடு நாளை (இன்று) அமைச்சில் இருந்து ஒரு குழுவை அனுப்பவுள்ளனர். அதற்கு அமைவாக பிரச்சினைகளை ஆராய்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் வந்து தீர்வு வழங்கவுள்ளார் - என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களின் சார்பில் 5பேர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு நேற்று மாலை அழைத்துச் செல்லப்பட்டனர்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் இவ்வாறு தென்னிலங்கை மீனவர்கள் அழைத்துச் செல்லப்பட்டமை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களை ஆத்திரமூட்டச் செய்துள்ளது. சட்டவிரோத நடவடிக்கைக்கு பாதுகாப்புத் தரப்பினரும் துணைபோகின்றனரா? என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நேற்றைய போராட்டத்தின்போது படகு ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-19)



### ஐ.நா....

இது தொடர்பில் விரிவான அறிக்கை மாணவர் ஒன்றியத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர்களாகிய நாம் பல்லாண்டு காலமாக மிகப் பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம். இந்தத் தீர்மானத்தினூடாக ஆகக்குறைந்தது நீதியாவது கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால், இந்தத் தீர்மானத்தால் எங்களின் நம்பிக்கை பொய்த்துப்போயுள்ளது. இந்தத் தீர்மானம், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள் பற்றிய எந்த புரிதலையும் வெளிப்படுத்தவில்லை. ஆகக்குறைந்த தமிழ் மக்கள் எதிர்கொண்ட துன்பங்கள், வேதனைகளைக் கூட பிரதிபலிக்கவில்லை.

இந்தத் தீர்மானம் பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்த சிறிலங்கா அரசாங்கங்களால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடுமைகளுக்குத் தீர்வு வழங்கத் தவறிவிட்டது. இத்தீர்மானம் குற்றம் இழைத்தவர்களை பொறுப்புக் கூறவைப்ப தற்குப் பதிலாக, அவர்களின் சர்வதேச குற்றங்களை வெள்ளை அடிப்பதுடன், அவர்களை பிணை எடுப்பதாகவே அமைந்துள்ளது.

தமது குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லை, தாம் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டோம் என்ற எண்ணத்தில், தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா அரச படையினர், எதிர்காலத்திலும் தமிழர்களுக்கு எதிராக அட்டூழியங்களைத் தயக்கமின்றி மேற்கொள்வதற்கு, இத்தீர்மானம் வழி ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா.வின் மூத்த அதிகாரிகள் மற்றும் பெரும் இழப்பைச் சந்தித்த தமிழ் சமூகத்தின் பல்வேறு தரப்பினராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட இந்தத்தீர்மானம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த தவறியது மட்டுமல்லாது, பாதிக்கப்பட்ட தமிழ் இனத்தின் பெரும் துயரத்தையும் வலிகளையும் புறக்கணித்துள்ளது. ஆகவே இந்த நியாயமற்ற தீர்மானத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் - என்றுள்ளது (அ-ஒ-125)

### உயிர்கொல்லி...

ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் போதைப் பொருள் பாவனை கட்டுப்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடலிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் 100 மாணவர்களுக்கு 5 மாணவர்கள் உயிர்கொல்லி போதைப் பொருள் பயன்படுத்துவதாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. அது தற்போது 100 மாணவர்களுக்கு 7 அல்லது 8 மாணவர்கள் என்ற அடிப்படையில் உயர்ந்துள்ளதாக மருத்துவத்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனாலும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த கல்வித் திணைக்களப் பிரதிநிதி, 100 மாணவர்களுக்கு ஒரு மாணவர் என்ற அடிப்படையிலேயே போதைப் பொருளுக்கு மாணவர்கள் அடிமையாகி உள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மாத்திரம் கவனம் செலுத்தாது வடக்கு மாகாணம் முழுவதிலுமாக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மீளவும் விசேட கூட்டம் ஒன்று இது தொடர்பில் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் பாடசாலைகளில் தொடர் விழிப்புணர்வு பயிற்சிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### உள்விவகாரங்களில்...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றஞ்சாட்டியுள்ளார். பொருளாதாரக் குற்றங்களுக்கு யாரேனும் பொறுப்புக் கூறினால் அவர்கள் மீது நாட்டின் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதாரக் குற்றங்கள் என்ற சொல்லை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிக்காமல் பலவந்தமாக இலங்கையை நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பதாகவும் அலி சப்ரி கடுமையாகச் சாடியுள்ளார்.

கடந்த காலங்களிலும், ஐ.நா. தமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக இலங்கை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### கத்தியைக்...

சந்திப் பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டிலிருந்தவர் காலைக்கடன் முடிக்கச் சென்று வீட்டுக்குள் நுழைந்தபோது திடீரென, முகக்கவசம் அணிந்த இருவர் கத்திகளைக் காட்டி மிரட்டியுள்ளனர். இதனையடுத்து வீட்டுக்குள் புகுந்த இரண்டு கொள்ளையர்களும் தம்பதியரை மிரட்டி, அவர்கள் அணிந்திருந்த மோதிரங்கள், தோடுகள் உட்பட நான்கரைப் பவுண் அளவிலான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் எதிர்ப்பால் 22 நிறைவேறுவதில் தடை

**கொழும்பு, ஒக். 6**

**நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவின் எதிர்ப்பால் அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் புதிய தடைகள் தோன்றியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**

நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு பட்டியலிடப்பட்டுள்ள சட்ட வரைவு கடந்த திங்கட்கிழமை அரசாங்கத்தின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் ஆளும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய சட்ட வரைவுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசமைப்பில் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாக்கும் வகையில் மட்டுமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்று இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், முழு அதிகாரம் கொண்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் காரணமாக நாட்டின் ஒற்றையாட்சித் தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் திருத்தம் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிக்கிறது. ஆனால், நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை - என்றார்.

அதேவேளை, நாட்டின் உறுதித் தன்மையைப் பேணுவதற்கும் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தேவை.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்களைக் கொன்று கிளர்ச்சியை அடக்கினார்.

நிர்வாக அதிகாரங்கள் அவருக்கு சகஜ நிலையை கொண்டுவர உதவியாக இருந்தன. பின்னர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக நசுக்கினார்.

ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி போன்ற கட்சிகள் அராஜகத்தை உருவாக்க முயல்வதால் நாட்டில் வன்முறைகள் மீண்டும் எழும் அபாயம் உள்ளன.

எந்தவொரு சாத்தியத்தையும் சமாளிக்க நிறைவேற்று அதிகாரங்கள் தேவை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவும் கருத்து தெரிவித்துள்ளார்.

(எ-இ)



கொழும்புத் துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாத் திருப்பலியும், தேர்ப் பவனியும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. பல நூறு மக்கள் இந்தத் திருவிழாத் திருப்பலியில் கலந்து கொண்டனர். (ச-135)


**கார்/வான் வாடகைக்கு உண்டு**

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.

**RSP Rent a Car**

தொடர்பு: 077 8989 691

**பராமரிப்பு சேவை**

வீடுகள், வீட்டுப்பூந்தோட்டங்கள் பராமரித்துத் தரப்படும்.

தொடர்பு: 077 5394 202

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**077 8748135**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- **076 755 8606**


# வெளிநாட்டு அனுமதியால் அரச சேவைக்குச் சிக்கல்!

## சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 6

அரச உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கினால் அரச சேவை பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரச உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு 5 வருட காலத்துக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கினால் அரசசேவையில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இதேவேளை, அரச நிறுவனங்களில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட அரசஊழியர்களுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கவேண்டும் - என்றார்.

(எ-இ)

# புதிய நடைமுறையால் 800 மருத்துவர்கள் ஓய்வு

கொழும்பு, ஒக். 6

60 வயதை எட்டிய அரசஊழியர்கள் ஓய்வு பெறவேண்டும் என்ற சுற்றறிக்கையின் காரணமாக 300 நிபுணர்கள் உட்பட 60 வயதுக்கு மேற்பட்ட 800க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் டிசம்பர் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் உபுல் கலப்பட்டி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இந்தநிலைமையால் நாட்டில் சுகாதாரச் சீர்குலைவு ஏற்படவுள்ளது.

கொழும்புக்கு வெளியே உள்ள பல மருத்துவமனைகள் மூடப்படலாம் என்றும் மருத்துவர் உபுல் கலப்பட்டி சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, சுகாதார சேவையின் அவசியத்தை கருத்திற்கொண்டு ஓய்வுபெறும் மருத்துவர்கள் தொடர்பில் மீண்டும் ஆலோசனை செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

(எ-இ)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**

**077 2417 589**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.